பாதுகாக்க வேண்டும், குடிதண்ணீர்ப் பிரச்சனையில் எப்படிப்பட்ட நிலைமை இருக்கவேண்டும் என்ற கருத்துக்களைச் சொல்வதற்கான நிலைமை ஏறபடும்.

ஆகவே, இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இங்கே சமர்ப் பிக்கப்பட்டுள்ள "பர்ஸ்பெக்டிவ் பிளானிங்", பெரிய பெரிய தஸ்தாவேஜு களையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு ஒரு நாளையாவது ஒதுக்கி விவாதிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்தால் இம்மாதிரியான குறைபாடுகள் எவ்வளவு தெரியாத முறையிலே வந்திருக்கிறது—இதிலே செய்யக்கூடிய தவறைப் பற்றிச் சொல்லவில்லை—தெரியாத முறையிலே, நமக்குத்தான் தெரிந்திருக்கிறது என்ற கண்ணோட்டத்தை வைத்துக்கொண்டு இப்படிப் பட்ட காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்று தெரியும் என்று சொல்லிக் கொள்கிறேன். பிறகு ஒவ்வொரு டிமாண்டாக எடுக்கும் நேரத்தில் ஓரிரு வெட்டுப்பிரேரணைகளை வற்புறுத்தக்கூடிய நிலை வரக்கூடும் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அவையின் கண் வைக்கப்பட்ட இறுதித் துணை மதிப்பீடுகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தந்துள்ள கருத்துக்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றி யைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

துணை மானியக் கோரிக்கையில் உள்நுழைந்து கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சில விவரங்களை இங்கே எடுத்துக்கூறினார்கள். அதிலே அவர்கள், அரசின்பால் ஒரு விளக் கம் கோரினார்கள். வறட்சிப் பணிகளுக்கு 21 கோடியே 29 இலட்சம் ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறீர்களே, இது எப்படித் திடீரென்று வந்தது, ஏற்கனவே அறிவித்ததற்கு மாறாக இருக்கிறதே என்று குறிப்பிட்டார்கள். இதில் எந்தவிதமான மாறுபாடும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

இறுதித் துணை மதிப்பீட்டின் தொடக்க உரையிலேயே நான் குறிப் பிட்டுள்ளதைப் போல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக வறட்சி நிவாரணப் பணிகளுக்காகச் செலவிட ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 8 கோடியே 56 இலட்சம் ரூபாய் ஆகும். குடிநீர் வடிகால் வாரியத்திற்காக 2 கோடி ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே இந்த மன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அஃதன்னியில் சுமார் 1 கோடி ரூபாய் நகராட்சிகளுக்கு இந்த வறட்சிப் பணிகளுக்காக அளிக்கப்பட்டி ருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, 11 கோடி 56 இலட்சம் ரூபாய். மொத்தம் உள்ள 21 கோடி 29 இலட்சம் ரூபாயில் மிச்சம் 9 கோடி 73 இலட்சம் ரூபாய் நமது திட்டச் செலவுகளில் இருந்து மாற்றியமைத்துச் செலவு செய்வதாகும். இதுவும் ஏற்கனவே அவையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆக, இந்த 11 கோடி 56 இலட்சம் ரூபாயையும், நம்முடைய திட்டச் செலவில் இருந்து மாற்றியமைத்துச் செலவிடுகிற 9 கோடி 73 இலட்சம் ரூபாயையும் கூட்டிப்பார்த்தால் 21 கோடி 29 இலட்சம் ரூபாய் கணக்குச் சரியாக வரும் என்பதை நான தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முதலில் குறிப்பிட்ட 11 கோடி 56 இலட்சம் ரூபாய் வறட்சிப் பணிகளுக்காக நடப்பு ஆண்டில் நாம் செலவு செய்திருக்கும் செலவை மத்திய அரசு ஒப்புக் கொண்டு 11 கோடி 56 இலட்சத்திற்குப் பதிலாக 7 கோடி 50 இலட்சம் ரூபாய்தான் தந்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்வேன். அடிக்கடி கூறுவதைப் போல் அந்த 7 கோடி 50 இலட்சத்திலும் கடன் 70 சதவிகிதம். மானியம் 30 சதவிகிதம் என்பதையும் இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்தமுடையதாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. தங்கமணி அவர்கள் மற்றொரு காரணம் சொன்னார்கள். இந்தச் சம்பள அகவிலைப்படியில் 300 ரூபாய்க்குக் கீழே உள்ளவர்களுக்கு 36 சதவிகிதம்; 300 ரூபாய்க்குமேல் உள்ளவர்களுக்கு 27 சதவிகிதம் என்று மாநில அரசு நிர்ணயித்திருக்கிறது; இது மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டது என்று குறிப்பிட்டார்கள். ஆனால், அது சரியல்ல என்பதுதான் எனக்குக் கிடைத்துள்ள தகவல். மத்திய அரசிலும் 300 ரூபாய்க்குக் கீழ் உள்ளவர்களுக்கு 36 சதவிகிதமும், 300-க்கு மேல் ஊதியம் பெறுகிறவர்களுக்கு 27 சதவிகிதமும் என்றுதான் இருப்பதாக நினைவு. மேற்கொண்டு தங்கமணி அவர்களுக்குத் தகவல் கிடைத்து அளிப்பார்களானால் நான் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இல்லாவிட்டால் நான் சொல்லுவது சரி என்று அவர்கள் திருத்திக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

பத்து கோடி ரூபாய் எதிர்பாராச் செலவு நிதியைப் பற்றியும் அவர்கள் குறிப்பிட்டு அதை 20 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். எதிர்பாராச் செலவு நிதி என்பது சட்டமன்றத்தினுடைய அனுமதி பெறுவதற்கு முன்பு செய்ய வேண்டிய செலவுகளைச் செய்வதற்காக உள்ள நிதியாகும். ஆனால், இதிலே செய்யப்படுகிற ஒவ்வொரு செலவும் சட்டமன்றம் முடிவு செய்துள்ள விதிகளின்படி அடுத்து வருகிற சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் சட்டப் பேரவையின் ஒப்புதலுக்காகத் துணை மானியங்களின் பகுதிகளாகக் கொண்டு வரப்படும் என்பதையும் நான் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவசியமான வளர்ச்சிப் பணிகளுக்காக, மிக முக்கியமான தேவைப் பணிகளுக்காக உடனுக்குடன் நமக்குத் தொகை தேவைப்படும்போது இந்த எதிர்பாராச் செலவு நிதியிலிருந்துதான் நாம் பணத்தை அதற்கு ஒதுக்கீடு செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலேதான் இப்படி 10 கோடி ரூபாயை நாம் 20 கோடி ரூபாயாக உயர்த்திக்கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் திரு. தங்கமணி அவர்களுக்குக் கூறிக் கொள்ளுகிறேன்.

நண்பர் வகாப் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒரு கோடி ரூபாய் மாத்திரந்தான் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொள்முதலுக்காக, உணவு தானியங்களை வாங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது; அது போதுமானது அல்ல என்று குறிப்பிட்டார்கள். நாம் நேரடியாகக் கொடுத்துள்ள

தொகை ஒரு கோடி ரூபாய். ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக கூட்டுறவுச் சங்கத்தினர் ரிசர்வ் வங்கியிடமிருந்து 10 கோடி ரூபாய் பணம் பெற்றுக் கொள்ள, பணிகளைத் தொடர்ந்து நடத்த வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, தேவைப்பட்டால் அதை உயர்த்துவதற்கும் அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நண்பர் வகாப் அவர்களுடைய சந்தேகத்திற்கு நான் விளக்கமாக அளிக்கிறேன்.

இந்த விவாதத்தைத் தொடங்கிய நம்முடைய நண்பர் சீனிவாசன் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டமே கவனிப்பாரற்றுக் கிடக்கிறது என்று சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வாதாடுவதற்கு நான் எந்தக் குறையும் சொல்லமாட்டேன். ஆனால், இன்றைக்கு இந்த வறட்சி நிவாரணப் பணிகளில் கூட இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதும் இந்த மாநிலத்திலேயே எல்லா மாவட்டங்களையும்விட அது அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் கருத்தில் கொண்டு இதுவரையில் 150 இலட்சம் ரூபாய்—நடப்பு ஆண்டில் 1974–75ம் ஆண்டில் 150 இலட்சம் ரூபாய் அங்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வேன்.

மேலும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பல கண்மாய்கள் சிறப்புத் திட்டங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டு—திருப்பத்தூர் கண்மாய்; இராமநாதபுரம் கண்மாய்; இராசசிங்கமங்கலம் கண்மாய் போன்ற பெரிய கண்மாய்கள் எல்லாம், நீண்ட நெடுங்காலமாக கவனிப்பாரற்றுக் கிடந்த சூழ்நிலை மாற்றப்பட்டு அந்தப் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் என்னென்ன பகுதிகளில் வேலைகள் நடைபெறவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிப்பார்களானால் அவைகளை கருத்தில் கொண்டு இந்த அரசு நிச்சயமாகச் செயல்படும் என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்வேன்.

திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் வறட்சி நிவாரண நிதிபற்றிக் குறிப்பிட்டார்கள். யாருடைய கையிலாவது பணத்தைக் கொடுத்தால் அது ஒழுங்காக முதலமைச்சர் கைக்கு வந்து சேருமா என்றெல்லாம் கேட்டார்கள். நேற்றுக்கூட 10 ரூபாய் கொடுத்தார்கள் என்று காட்டினார்கள். என்னிடத்தில் கொடுப்பதாகச் சொன்னார்கள் . . . .

(திருமதி சத்தியவாணிமுத்து ஒரு கவரை முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்கள்.)

திரு கே.டி.கே. தங்கமணி : சட்ட மன்றத்தில் சாமான்களைக் கொடுக்க விதிமுறைகள் இருக்கின்றனவா ? அப்படி விதிகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் இப்படிச் செய்தால் எக்ஸ்சேஞ்ச் ஆப் கூட்ஸ் என்று ஆகிவிடாதா ? இந்த மாதிரி முறை சரிதானா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதை நான் அவ்வளவு வலியுறுத்திப் பெற்றுக் கொண்டதற்குக் காரணம் அம்மையார் அவர்கள் நீங்கள் வறட்சி நிதி கொடுக்க மாட்டோம். யாரையும் கொடுக்கவும்

சொல்ல மாட்டோம் என்று சொன்னார்கள். அவர்களே வாங்கிக் கொண்டு வந்ததற்கு நன்றி தெரிவிப்பதற்காகத்தான் அவ்வளவு வலியுறுத்திப் பெற்றுக்கொண்டேன். (குறுக்கீடு.)

ஒவ்வொரு நிதிக்கும் கணக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு இடங்களில் வழங்கப்பட்ட, பொதுக்கூட்டங்களில் வழங்கப்பட்ட தொகை எல்லாம் முறையாகக் கணக்கு வைக்கப்படுமா என்றார்கள். இன்னும் சொல்லப்போனால் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், கண்ணொளித் திட்டம், சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம், ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம் இப்படி எல்லாத் திட்டங்களும் இப்போது பட்ஜட் கணக்கில் வருவதை, துணை மானியக் கோரிக்கையில் அந்தக் கணக்குகள் வைக்கப்பட்டு இந்தப் பேரவையின் அனுமதி பெற அந்தக் கோரிக்கைகள் எழுப்பப்பட்டிருப்பதை நன்றாக அறிவோம். அதற்கான ஆடிட்டுகள் இருக்கின்றன. அறிக்கைகளில் கூட, நான் விடுத்துள்ள, அறிக்கைகளில் சட்ட பேரவையில் கூறியதைச் சொல்லியிருக்கிறேன். "யாரும் வலியுறுத்தி நிதிகளைப் பெறக்கூடாது. அப்படி ஏதேனும்; குறைபாடுகள் வந்தால் எனக்கு அறிவிக்க வேண்டும். அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

அவர்கள் சொன்னார்கள்—திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் என்ற முறையில் அறிக்கை விடுகிறார் என்று. அந்த அறிக்கையில் கூட—யாரும் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தனியாக வசூலில் ஈடுபடக் கூடாது என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். பொதுக்கூட்டங்களில் உண்டியல் எடுத்து அதன்மூலம் கிடைக்கிற தொகையைப் பொதுக்கூட்ட மேடையில் எண்ணி அதைப் பொதுமக்களிடத்தில் அறிவித்து, அதனை இந்த முகவரிக்கு அனுப்பவேண்டும். "டிராப்ட்" எடுத்தோ, ரொக்கமாகவோ எப்படி அனுப்பினாலும் அரசுச் சார்பில் செயல்படுகிற, நிதி இலாகா சார்பில் செயல்படுகிற "முதலமைச்சர், தமிழ்நாடு வறட்சி நிவாரண நிதி" என்ற தலைப்பில் இந்த இலாகாவுக்கு நேரடியாக அனுப்ப வேண்டுமென்று தெரிவித்தேன். அதிலே எந்தத் தவறும் விளைய இடம் இல்லை. ஏதாவது தவறுகள் விளைந்தால் உடனடியாகச் சுட்டிக்காட்டப்படுமானால் ஏற்ற நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்வேன்.

பிற்பட்டோர் நலத்துறை விடுதி ஒன்றில் நடைபெற்ற சம்பவம் குறித்து நண்பர் சீனிவாசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி விசாரித்த அளவில் 22, 23 ஆகிய தேதிகளில் தியாகராயநகர் விடுதியில் இருக்கின்ற மாணவர்களுக்கும், சமையல்காரர்களுக்கும், பணியாளர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டு அதன் காரணமாக மாணவர்கள் சமையல்காரர்களையும், பணியாளர்களையும் அடித்தார்கள் என்ற புகார் எழுந்து அதன் தொடர்பாக அந்த விடுதியில் இருந்த குழல் விளக்குகள் நாற்காலிகள், மேஜைகள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வன்முறைச் செயல்களுக்குப் பயந்து பல மாணவர்கள் விடுதியை விட்டு வெளியேறிவிட்டார்கள்.

24—3—1975 அன்று அவர்கள் வெளியேறிய பிறகு விடுதியிலுள்ள 100 பேர்களில் 20 பேர்கள் மாத்திரம் விடுதியில் தங்கியிருக்கிறார்கள் என்றும் இதுதான் விடுதியில் நடந்த விவகாரம் என்றும் மேற்கொண்டு என்ன நடைபெற்றது என்பவைகளை நிச்சயமாக விசாரித்துத் தக்க நடவடிக்கைகளை அரசின் சார்பில் எடுப்பேன் என்று உறுப்பினர் அவர்களுக்கு நான் இங்கே தெரிவித்துக் கொண்டு, இந்தத் துணை மானியத்தைத் துணையாகக் கொண்டு அவரவர்கள் தொகுதிக்குச் செய்யப்பட வேண்டிய பல்வேறு காரியங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியுள்ளவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு, இந்த அளவிற்கு உரையாற்றிய, கருத்துக்களை வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்து இந்த அளவில் அமைகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இப்படிக் காலமெல்லாம் இராமநாதபுரம் மாவட்டம் அரசாங்கம் செய்கின்ற இப்படிப்பட்ட உதவிகளை எதிர்பார்ப்பது தான் நீடிக்குமா? இதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரமாக ஆனந்தராவின் சிபாரிசின்படி, அழகர் அணைத் திட்டத்தை நிறைவேற்ற முடியாதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைகள் எல்லாம் ஆராயப்படாமல் இல்லை. ஆராயப்படுகிற நேரத்தில், அத்திட்டத்தின் காரணமாக ஏற்படும் பலன்கள் மிகக்குறைவு என்று சொல்லப்படுகிறது. இனியும் தொடர்ந்து ஆராயப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## (7) 1974–75-ம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு.

### நிதிக் கோரிக்கை எண் 1.—நிலவரித் துறை.

மாண்புமிகு டாக்டர் மு கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக்கோரிக்கை எண் 1. நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 27,17,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்"

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்குவிடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

### நிதிக்கோரிக்கை எண் 4. பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்: